ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

आशीविषविषविषमैर्निमिषोन्मेषैर्निषेवितैर्विषयैः ।
अलमधुना कलयेथा मानसमिहिका मयूखचूडालम् ॥

ஆஶீவிஷவிஷவிஷமைர்நிமிஷோந்மேஷைர்நிஷேவிதைர்விஷயை: । அலமதுநா கலயேதா² மாநஸமிஹிகா மயூக²சூடாலம் ॥

हेमानस-ஓ! மனமே!! आशीविष-ஸர்ப்பத்தின் विष-விஷம்போல் विषमैः-கொடியதுகளும் निमिषोन्मेषैः-ஒருக்ஷணத்திற்குள் கண்டழியக்கூடியதுகளும் निषेवितैः-(இதுகாறும்) ஸேவிக்கப்பட்டதுகளுமான विषयैः-விஷயங்களால் अलं-போதும். अधुना-இப்பொழுது मिहिका-பனியை मयूख-கிரணமாக உடைய சந்திரனை चूडालं-சிரஸில் முடிக்கொண்டிருக்கும் (பரமேசுவரனை) कलयेथाः-நினைத்துக்கொண்டிருப்பாயாக.

நமது பரமாசாரியாள் அவர்கள் பவப்பிணியால் மோஹப்பட்டு விஷயங்களையே பெரிய புருஷார்த்தமாக நினைத்துக்கொண்டு அவைகளையேயனுபவித்து, அதனால்மீளாத்துக்கத்திற்குமாளாகிமயங்கிப் பரமேசுவரனை நினைக்க நேரமில்லாமல் அங்குமிங்கும் கீழும்மேலுமாகத்திரிந்து கொண்டிருக்கும் ஸம்ஸாரிகளிடம் கருணைகூர்ந்து அனேகம் பிரகரணங்களை யருளிச்செய்திருக்கின்றார்கள். அவற்றுள் மனதை யடக்கும் சக்தியுள்ளவனான ஒருதீரபுருஷன் தன் மனதை ஸம்போதனம் செய்து அதுகட்டுப்பட்டு காமத்திற் கிடுபடாமல் காமாரியான காலகாலனையே கனவிலும் நினைவிலும் நினைத்து, நிலைத்த புருஷார்த்தத்தையடையும் வழியை யுபதேசிப்பதாக ஒருசிறுபிரகரணத்தை 12 சுலோகங்களிலியற்றியிருக்கிறார்கள். அதை இங்கு விவரிப்பாம் அதில் இது முதலாவது சுலோகம் எனக்குப்பிரியமான, ஓ! மனமே!! நீ நீண்டகாலமாக நீலகண்டனை நினைத்து நித்திய புருஷார்த்தத்தை நான் அடையாமற் போகும்படி செய்ததோடு மாத்திரமில்லாமல், அனுபவிக்கும் பொழுதெல்லாம் கொடிய ஸர்ப்பவிஷம்போல் மயக்கத்தையும் மூர்ச்சையையும் கொடுக்கும் கொடிய சுவபாவமுள்ளவிஷயங்களிலும் பற்றுதலையடைந்து அவைகளையே பெரிதாக நினைத்து அனுபவிக்கின்றாயே? அதில் ஏதாவது சுகலேசமிருக்கின்றதா ? சுகம் கிடைக்குமென்று நீ ஏமாந்து மீளாத்துக்கத்திற்குமன்றோ ஆளாகிறாய், ஏதோ அற்ப சுகம் கிடைப்பதாக நினைக்கின்றாய், அதுவும் கணப்பொழுதில் கண்டு மறைந்துவிடுகின்றது பிரத்தியக்ஷமாயிருக்கின்றதல்லவா? நீ எந்த விஷயங்களை சுகஸாதனங்களாகக் கருதுகின்றாயோ அதுநித்தியங்களாயிருந்தாலல்லவா அதனால் சுகம் கிடைக்கும், அந்த விஷயங்களோ முன் நிமிஷத்தில் கண்டு அடுத்தநிமிஷத்திலழிந்து விடுகின்றதுகளே அதனால் அவைகளை இதுவரை அனுபவித்ததுபோதும், இனியாவது சந்திரனைச்சிரஸிலணிந்த பரமேசுவரனையே நினைப்பாயாக.

பத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.

க்ஷய௵ தை-மீ க௪௨

# புருஷார்த்தம்.

பிராணிகளனைவரும் அடைய விரும்புவது புருஷார்த்தமாம் அதில் முக்யமானது சுகம். அது நித்தியமென்றும், அநித்தியமென்றும் பேதத்தால்இருவகைப்படும். நித்தியசுகத்தைத்தான்மோக்ஷமென்று சுருதிகூறுகின்றது. அநித்ய சுகத்தைக்காமமென்பர்இந்திரிய ஜன்யப் பிரத்தியக்ஷத்திற்கு விஷயமாகக்கூடியது. இந்திரியங்களுக்கும் விஷயங்களுக்கும்ஸம்பந்தம் நேரும்போதுஉண்டாகக்கூடியது சரீரம், வாக்கு, மனது, இவைகளாலனுபவிக்கக்கூடியது. ப்ரம்மதேவர் முதல் ஸ்தாவரபரியந்தமானப் பிராணிகளிடத்தில் தாரதம்மியத்தோடுகூடியதாகப் பிரஸித்தமாயுள்ளது. துக்கத்தோடு கலந்துள்ளது. அவிவேகிகளால் மாத்திரம் இச்சிக்கக்கூடியது. நித்தியசுகமோவென்றால் இப்படியெல்லாமில்லாதது இவைகளுக்கு ஸாதனமாதல்பற்றி தர்மத்தையும், அர்த்தத்தையும், புருஷார்த்தமாகச் சேர்த்தார்கள். ஸாதனத்தையும் பலம்போல் கருதுவதுமுண்டு. ஆகவே தர்மமும் அர்த்தமும் முக்கிய புருஷார்த்தங்களல்ல. ஆனால் காமமெனப்படும் விஷயசுகத்திற்கு ஸாக்ஷாத்ஸாதனமாயும், மோக்ஷமெனப்படும் நித்திய புருஷார்த்தத்திற்குப்பரம்பராஸாதனமாயுமாவதால் கௌண புருஷார்த்தமாம். ஆதலால் தர்மார்த்தங்களை முக்கிய புருஷார்த்தங்களென்றாவது, முக்கிய புருஷார்த்த ஸாதனங்களென்றாவது நினைக்கக்கூடாது. அப்படி நினைத்தால் அவர்கள் மீண்டும் ஜராமரணங்களையேயடைவார்கள் என்று முண்டக சுருதி கூறுகின்றது. ஆகையால் அவைகளை எவ்வாறு உபயோகித்தால் பரம்பரையாகவாவது பரம புருஷார்த்த ஸாதனங்களாகுமோ? அவ்வாறு ஸம்பாதித்து உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். அர்த்தமென்பது அவிவிவேகிகளுக்கு அநர்த்தத்தையே விளைவிக்குமாம். அதனாற்றான் தைத்தி

ரீய சுருதியும் "நல்லறிவு கிடைத்தபின்பு தனக்கு ஐசுவரியம் கிடைக்கவேண்டும்" எனச் சிரேயஸ்ஸை விரும்பியவன் பிரார்த்தித்ததாகக் கூறுகின்றது. அந்த வாக்கியத்தின் பாஷ்யத்தில் நமது பாஷ்யகாரர் அவர்களும்— "அறியாதவனுக்கு ஐசுவரியம் அனர்த்தத்தையே விளைவிப்பதாகவும்" என்று கூறினார்கள். இதனால் அக்ஷரங்களையுச்சரிக்கும் சக்தி வருமளவு தாயின் அனுசாஸனத்திலும், அதன் பிறகு உபநயனம் ஆகும் வரை பிதாவின் அனுசாஸனத்திலும், அதன் பிறகு ஸகல வித்தியாஸாதனங்களைக் கசடறக் கற்கும் வரையில் ஆசாரியனுடைய அனுசாஸனத்திலுமிருந்து புத்தியைச்சுத்திப்படுத்திக்கொண்டு நல்லறிவையடைந்தவன் ஐசுவரியத்தையபேக்ஷிக்கவேண்டும். அப்படியானல் அந்த ஐசுவரியம் அகாரியங்களில் உபயோகப்பட்டு அனர்த்தத்தைத் தனக்கும் ஜகத்துக்கும் விளைவிக்காமல் தர்ம்ம ஸாதனமாகவே ஆகும். இன்றேல் விபரீதமாகவேயாகும். இந்தக் கருத்தை,

यौवनं धनसम्पत्तिः प्रभुत्वमविवेकिता ।
एकैकमप्यनर्थाय किमु यत्र चतुष्टयम् ॥

யௌவநம் தநஸம்பத்தி: ப்ரபுத்வமவிவேகிதா ।
ஏகைகமப்யநர்தாய கிமு யத்ர சதுஷ்டயம் ॥

யௌவந வயதும், நிறைந்த தனமும், பிரபுத்தன்மையும், அவிவேகமும், ஒவ்வொன்றும் அனர்த்த ஹேதுவாகும். இந்நான்குமொருவனிடத்திலிருந்துவிட்டால் கேழ்க்க வேண்டுமா?

என்ற நீதியும் நன்றாய் விளக்கிக் காட்டுகின்றது. அதனல் நல்லறிவு கிடைத்தபிறகு ஏராளமான பணத்தையடைந்து தர்மத்தில் தாராளமாக மனதைச்செலுத்தி, அது காமனையால்க்குருகிய பயனைக்கொடுத்துக் குன்றிவிடாமல் நிஷ்காமமாக ஈசுவரப்ரீதியுண்டாவதற்காக அனுஷ்டித்துச்சித்த சுத்தியையடைந்து அபரவைராக்கியத்தையும், பின்பு பரவைராக்கியத்தையும்பெற்று ஸதாசாரியனையடுத்து அவனது அருளால் சிரவணுதிஸாதனத்தைத்தவராது ஸம்பாதித்து ஸாக்ஷாத்காரம்பெற்று பரமபுருஷார்த்தபாகிகளாக எல்லோருமாக வேண்டுமெனப் பரமேசுவரனைப்பன்முறை பிரார்த்திக்கின்றேன்.

பத்திராதிபர்.

# வருகிற தை-மீ 20௳யில் மகோதய புண்ணிய காலத்துக் குறிய பூர்ணலக்ஷணமில்லை யென்பது மிகத்தொல்லை.

அக்ஷய-௵ கார்த்திகை-மீ 24௳ ஆர்யதர்மத்தில் 'ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணபுரம் சிவஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் வருகிற தை-மீ 20௳ புதவாரம் மகோதய புண்யகாலமென்று ஆதார வசனத்துடன் எழுதியிருப்பதையும் அவ்விதமல்லவென்பதற்கு மூலஸ்மிருதி வசனங்கள் காட்ட வேண்டுமென்று வேண்டிக்கொண்ட விஷயங்களைப்பண்டிதர்கள் பலர்களும் பார்த்திருக்கலாம்.

பிறகு

க்ஷய-௵ மார்கழி-மீ 8௳ வெளிவந்த அதே ஆர்யதர்மத்தில் 'வைதிகாபிமானி'' என்ற ஓர் வித்வன் மணியால் முன் தீக்ஷிதர் அவர்கள் செப்பியவைகளுக்கு முற்றிலும் ஒப்பற்ற வசனங்களை வரைந்துவிட்டு ஆதாரங்காட்டிவிட்டதாகவும் அப்புரம் ஆசாரத்தையும் காட்டி மதி தினத்தன்று தான் மஹோதயம் என நிச்சயித்ததாக வரைந்திட்ட வசனங்களையும் பத்திரிகாபிமானிகள் பார்த்திருக்கலாம்.

இவ்விஷயத்தில் தீக்ஷதர் அவர்கள் கொடுத்த வினவுக்கு அடுத்த பத்திரிகையில் நமது மித்திரமணி வைதிகாபிமானி விடுத்தவிடை ஒவ்வாததென்பதை மாத்திரம் இச்சமயம் இயம்பலானேன்.

அதாவன

1. மற்றும் பலரும் கருதுகின்றூர்—கருதுபவர்கள் எவர்கள்? அவர்களின் அபிதானங்களை அன்னியர் அறியக்கூடாதா? அவர்கள் தங்களைச் சார்ந்தவர்களானபடியாலோ? தங்களைப்போல் பத்திரிகையில் அவர்களின் நாமங்களைப்பார்க்கவியலவில்லை ? அவர்கள் கருதுவது ஸ்வாபிப்பிராயபரிசுத்தத்தை முன்னிட்டா? அல்லது ஸ்மிருதி வசனங்களை முன்னிட்டா ?

2. அவ்வசனங்கள் இவர்களின் அபிப்பிராயத்தைப் பின்பற்றுமென்று தோன்றவில்லை.

தோன்றவில்லையென்பது தங்கள் இஷ்டத்திற்கு இடையூராகஇருப்பதால் தோன்றவில்லையா? அல்லது அவர் வசனங்களுக்கு அர்க்களங்களான அன்னியஸ்மிருதி வசனங்களைக் கொண்டா?

3. ரூடியால் ஏற்பட்டதா யௌகிகமாகக் கூறப்பட்டிருக்கின்றதா? அமர கோசத்தில் இருக்கும்தங்கள்சக்ஷிக்குஅனுகுணமாகசக்யார்த்தத்தைச் சம்மதித்தீர்கள், பங்கேருஹம்போல் யோகரூடி என்று என் ஒப்புக்கொள்ளக்கூடாது.

(4) சோமசப்தாத் "अपत्यार्थे यञ्" ஸவ்யத்யாயேட் ஷ்யுங் வந்து புதன் என்று சப்தகல்பத்ருமத்திலும் எழுதியிருப்பதையும் சற்று சமாதான மனத்துடன் எடுத்துப்பார்க்க.

5. இதுதான் இந்த இடத்திற்குப் பொருத்தமான பொருள் என்கிறீர்கள். தங்களிஷ்டப்படி திங்கள் கிழமை என்று அர்த்தம்செய்யவேண்டி இந்த இடத்தில்இஷ்டத்திற்குஇதுதான்பொருத்தமானபொருள் என்றால் தீக்ஷிதர் அவர்கள்இஷ்டப்படி புதன்கிழமை என்று அர்த்தம்செய்யவேண்டி சம்பந்தார்த்தத்தில் अण् ஸண் பிரத்தியயத்தினால்இந்தஇடத்திற்குஇதுதான் பொருந்துமென்று ஏன் சொல்லமாட்டார்கள்.

"सौम्ये वारे" ஸௌம்யே வாரே தனிப்பதமாகக் கூறுமிடத்தில் सौम्य ஸௌம்ய பதத்திற்கு வாரபதத்தோடு அபேத சம்பந்தமாக அன்வயமா? அல்லது பேத சம்பந்தத்தாலா? अण् ஸண் ப்ரத்யத்தின் பேரில் அபேதசம்பந்தம் சொல்வதால் ஆக்ஷேபணையென்ன. அவ்விதம் சொல்லக்கூடாதென்றால்.

ஸ்மிருதிமுக்தாவலி अक्षराभ्यासप्रकरणे ஸக்ஷராப்யாஸப்ரகரணே वारे दिनेशभृगुपुत्रबृहस्पतीनां विद्वानसौ भवति योपि विमूढबुद्धिः।चन्द्रे च चन्द्रतनये च भृशम् வாரே தி3நேஶப்4ருகு3புத்ரப்3ருஹஸ்பதீநாம் வித்3வாநஸௌ ப4வதி யோபி விமூட4பு3த்3தி4:। சந்த்3ரே ச சந்த்3ரதநயே ச ப்4ருஶம் என்ற இடத்திலும், श्राद्धकाण्डे मरणदिनगुणदोषप्रकरणे च गार्ग्यः ஶ்ராத்3த4காண்டே3 மரணதி3நகு3ணதோ3ஷப்ரகரணே ச கா3ர்க்3ய:—

भद्रे भूमिप्रदानं स्यात् त्रिपदर्क्षे हिरण्यकम् ।
अङ्गारके त्वनड्वाहं गुरौ वस्त्रं तु दक्षिणा ॥
शुक्रे रजतदानं स्यात् तत्र द्रव्यप्रदस्सुखी ।
वारे वाराधिदैवत्यं द्रव्यं दत्वा न दोषभाक् ॥

ப4த்3ரே பூ4மிப்ரதா3நம் ஸ்யாத் த்ரிபத3ர்க்ஷே ஹிரண்யகம் ।
அங்கா3ரகே த்வநட்3வாஹம் கு3ரௌ வஸ்த்ரம் து த3க்ஷிணா ॥
ஶுக்ரே ரஜததா3நம் ஸ்யாத் தத்ர த்3ரவ்யப்ரத3ஸ்ஸுகீ2 ।
வாரே வாராதி4தை3வத்யம் த்3ரவ்யம் த3த்வா ந தோ3ஷபா4க் ॥

என்ற இடத்திலும் अस्थिसञ्चयनप्रकरणे அஸ்தி2ஸஞ்சயநப்ரகரணே

बुधसोमौ शुभौ ज्ञेयौ मध्यमौ गुरुभार्गवौ ।
अर्कारमन्दा निन्द्यास्स्युः प्रशस्तं विषमेऽहनि ॥

புதஸோமௌ ஶுபௌ ஜ்ஞேயௌ மத்யமௌ குருபார்கவௌ
அர்காரமந்தா நிந்த்யாஸ்ஸ்யு: ப்ரஶஸ்தம் விஷமேऽஹநி ॥

என்ற இடத்திலும் முன் சொல்லியிருக்கிற

चन्द्रे चन्द्रतनये अङ्गारके गुरौ शुक्रे
சந்த்ரே சந்த்ரதநயே அங்காரகே குரௌ ஶுக்ரே

என்ற சப்தம் எந்தப் பதங்களுக்கு வாரபதத்துடன் எவ்வித ஸம்பந்தம் சொல்ல நேரிடும். அன்றியும்

बुधसोमौ अर्कारमन्दाः புதஸோமௌ அர்காரமந்தா:

என்ற பதங்கள் எந்த பதத்துடன் எந்த சம்பந்தம் செய்ய நேரிடும். அவ்விடத்தில் தாங்கள் அர்த்தத்தை அங்கீகரிக்க நேரிடுமா? அன்றியும் இந்த இடங்களில் அமரர்க்க பாதச்ரவணஎன்ற இடத்தில் अर्क भानुवारः அர்க பாநுவார: என்று வியாக்கியானம் செய்ததுபோல் என் வியாக்யானம் செய்யவில்லை. வாராதிபதியை போதிக்கும்சப்தங்கள்வாரத்தைக் குறிப்பதாக ஸ்மிருதிகளில் பிரயோகம் செய்திருந்தால் ஆங்கு அதை உதாஹரிக்கும் நிபந்தனைக்காரர்கள் வியாக்யானம் செய்வார்கள் என்று மார்கழி௴ 15௳ பத்திரிகையில் சொல்லியிருக்கிறார்களே. வியாக்யானம் செய்யாததால்வாராதிபதிக்குத்தான் அர்த்தஞ்செய்யவேண்டியதுதானே பிரகிருத பிரபந்தத்தில் வாராதிபதியைப் போதிக்கக்கூடிய சப்தங்களும்அந்த சப்தங்கள் வாரபதத்துடன் சேர்க்க வேண்டியதுகளாயும் அனேக இடங்களில் அநேகங்களாக இருக்கின்றன. இங்கு சில பதங்களை ஸ்தாலீபுலாக நியாயம் பற்றி सौम्ये वारे ஸௌம்யே வாரே என்ற இடத்தில் அர்த்தஞ் செய்ய வேண்டியதற்காக திருஷ்டாந்தமாகக் காட்டினேன்.

ஆக்னேய புராணத்திலும் चान्द्रे वारे சாந்த்ரே வாரே

6. ஆக்னேய புராணம் ஒன்றா? பலவா? ஒன்றென்றால் அப்புராணத்தில் இவ்வசனத்தை ஓரிடத்திலும் காண்கிலேன். பலவென்றால் அவைகள் எங்கு இருக்கின்றன ?எடுத்து காண்பிக்க முடியுமா? ஆனால் துலாகாவேரி புராணத்தில் चान्द्रवारे சாந்த்ரவாரே என்று இவ்விடங்களிலிருக்கும் ஐந்தாறு புஸ்தகங்களில் இருப்பதைத் தவிர வேறில்லை

7. ரௌத்ரி௵ தை௴ 26௳ திங்கள் கிழமை பஞ்சாங்கங்களில் மஹோதய புண்ணியகாலம் போடப்பட்டிருக்கிறது.

பஞ்சாங்கங்களில் போடப்படும் எல்லா விஷயங்களும் தம்போலியர்களுக்கு பிரமாணமாகுமா? அதைப் பிரமாணமாக தாங்கள் செய்யும்பக்ஷத்தில் உபாகர்ம விஷயத்தைப்பற்றி பிரசுரித்த பழைய பஞ்சாங்கங்களில் பார்த்திருப்பீர்கள். 15வருஷத்துக்கு பிறகு ஏற்பட்டு வரும் அதே பஞ்சாங்கங்களில் இருவித யஜுர் உபாகர்மாவை பிரசுரித்திருப்பதையும் பார்க்கலாம், அப்போது இருந்த தர்மசாஸ்திரங்கள் தானே இப்போதும்இருக்கின்றன. பஞ்சாங்கம் மாறித்தா? தர்மசாஸ்திரங்கள் மாறித்தா? அந்தப் தர்மசாஸ்திரார்த்தப் பிரவர்த்தகர்களின் அகம்மமதையால்அர்த்தம் மாறித்தா? உபாகர்ம விஷயமாக ஆதியில் வாதித்த அறிஞர்கள் ஸ்மிருதி வசனங்களைக்கொண்டு வாதித்தார்களேயன்றி பஞ்சாங்கங்களை ஆதாரம் காட்டவில்லையே? கர்மவிஷயங்களைப்பற்றி ஆசங்கை நிகழ்ந்தால் தம்போலியர்களுக்கு தர்மசாஸ்திரங்கள் ஆதாரமென்றால் அவைகளிலுள்ள வசனங்களைக்கொண்டு பிரகிருதவிஷயத்தைத் தீர்மானிக்கவேண்டும். பஞ்சாங்கம் ஆதாரமென்றால் அநேக அவ்யவஸ்தைகள் வந்துவிடும்.

8. அன்றியும் ராஜமகேந்திரபுரம் என்வெங்கிடேசம் என்பவர்சித்தாந்த பஞ்சாங்கத்தின் வசனப்படிகூட மகோதயபுண்ணியகாலம் நாளதுதை மீ 20உ புதன் கிழமையென்று போட்டிருப்பதாக ச்சொல்வதுதங்களுக்கு இஷ்டமில்லையா? தாங்கள் அப்பஞ்சாங்கத்தை பார்க்கவில்லையா? அது பஞ்சாங்கமில்லையா?

அதில் चान्द्रे वारे வாஸரே வாரெ என்பதுதான் சரியான பாடம் அவர்கள் கூறியிருக்கும்பாடம் சரியாகதோன்றவில்லை.

பலஸ்மிருதிகளில் चान्द्रे वारे வாஸரே வாரெஎன்றிருப்பதினாலோ அல்லது திங்கள்கிழமையைக் குறிக்கும் வசனங்களிருப்பதினாலோ தீக்ஷிதர் கூறிய அப்பாதீக்ஷிதீயத்தைப் பார்த்து அதில் चान्द्रे वारे வாஸரே வாரெ என்றிருப்பதினாலோ அல்லது தங்களிஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டியிருப்பதினாலோ चान्द्रे वारे வாஸரே வாரெ என்பதுதான்சரியான பாடம் என்றிச்சந்தீர்கள். அவரவர்கள் இஷ்டப்படி திருத்தினால் என்சரியாகமாட்டாது. உண்மைதான் ஏன் தோன்றும்? चान्द्रेवारे வாஸரே வாரெ என்பதற்கு முன் போல் தங்களிஷ்டப்படி அர்த்தம்செய்ய இயலாத்தினால் சரியாகத்தோன்றுதுதான். बुधवारेण योगोऽयं புதவாரேண யோகோऽயம் அந்தகிரந்தத்திற்கு நம் தேசத்தில்பிரசித்தியுமில்லை. அதின்படி அனுஷ்டானமும் கிடையாது. ஆகையால் பிரசித்தமான அனுஷ்டானத்திலுள்ள பல ஸ்மிருதிகளுடைய கருத்திற்குவிரோமாயிருக்கும் இதை அங்கீகரிப்பது உசிதமில்லை,

பிரசித்தமாய் அனுஷ்டானத்திலுள்ள எந்த எந்த ஸ்மிருதிகளின் வசனங்களுக்கு அப்பாதீக்ஷிதீயம் எங்கெங்கு விரோதமாயிருக்கின்றது. இவைகளை எடுத்துக் காட்டினீர்களா? அக்ரந்தத்தைஅவலோகனஞ்செய்யாமலே बुधवारेण புதவாரேண என்றிருப்பதால் அதை திருத்த இடமில்லாமல் பிரசித்தி இல்லை அனுஷ்டானமில்லை என்று அகற்றி விடுவது அபிக்ஞர்களுக்கு அழகாகுமா?

நம் அனுஷ்டான கிரந்தத்தில் ஒரு விஷயத்தைப்பற்றி ஆசங்கை நிகழ்ந்தாலாவது அல்லது பத பதார்த்தங்களில் பாகுபாடு பிறந்தாலாவது அச்சமயம்அன்னியஸ்மிருதியைக்கொண்டுஆதாரங்காட்டவேண்டுவது அவசியமாகும். அக்காலம் அப்பாதீக்ஷிதீயத்தை அங்கீகரிக்க ஆக்ஷேபணை என்ன? ஒரு சமயம் தங்களிஷ்டப்படி அதைப் பிரசித்தியிலலையென்று அசத்தி செய்து விடுவோம், தாங்களாவது பிரகிருதம் உண்டாயிருக்கும் விவகாரத்தைக் கொடுத்துமயக்கிடும் सौम्य ஸௌம்ய பதத்திற்கு திங்கள் தான் என்று அர்த்தத்திற்கு அவலம்பமான அநேக ஸ்மிருகதிளில் நின்றும் ஒரு வசனத்தையாவது விடுக்கக்கூடாதா?

கிருந்தத்தைப் பாராமல் सोमवारेण ஸோமவாரேண என்று மூலஸ்மிருதியில் பாடமிருக்கவேண்டும் என்று ஜோவியம் சொல்லு ஸமர்த்தளுக்கு மதிப்பை அளிக்காது.

विचारारूढकृत्यानां व्यभिचारः कुतो भवेत् ।

விசாராரூடக்ருத்யாநாம் வ்யபிசார: குதோ பவேத் ।

सौम्य ஸௌம்ய ஸோமபதத்திற்கு சோமதேவதாகமான திங்கள்கிழமை என்றும்சந்திர புத்திரனுன புதன் என்றும்அர்த்தம் செய்வதை ஆக்ஷேபிக்க முடியாது. ஒரு கிரந்தத்தில் ஒரு விஷயத்தை முன்னிட்டு இரண்டு விதமாக அர்த்தம் எற்பட்டால் அதை ஒருவிதமாக சித்தாந்தம் செய்வதற்கு அன்யஸ்மிருதியை ஆதாரங் காட்டினுர் தீக்ஷிதர் மூலஸ்மிருதி வசனங்களிருந்தால் வேண்டுமென்று தீக்ஷிதர் கேட்டிருப்பதால் முந்தி அவைகளை அறிவித்தோம்.

9. அறிவித்த அன்யஸ்மிருதில்வசனங்கள் எவைகள்ஒன்றையும்காணவில்லையே? சிஷ்டாசாரமும் திங்கள் கிழமையன்றுதான். இக்காலத்தில் சிற்சில விஷயங்களுக்கு பிரத்தியக்ஷஸ்மிருதிவசனங்கள் இருந்தபோதிலும் மனமுறண்டைக் கொண்டோ? மதிபலத்தைப் பெறக்கருதியோ? மதியை அடைய ஆவலுற்றோ?. அர்த்தாபேக்ஷையை முன்னிட்டோ அகங்கார வேசத்தினலோ அவ்வசனங்களை அகற்றி சிஷ்டாசாரம் தேசாசாரம் குலாசாரம் என்ற மந்திரத்தை அபிமந்திரித்து விடுகிறுர்கள் போதாயனர் ஆபஸ்தம்பர் கூறியபடி சிஷ்டானுஷ்டான லக்ஷணத்திற்கு சற்றும் பொருத்தமில்லை சுருதிஸ்மிருதிகளுக்கு அவிரோதமான ஆசாரத்தை ஆதரிப்பதில்

யாருக்கும் ஆக்ஷேபணையில்லை. இச்சமயம் ஏற்பட்டிருக்கும்மகோதயத்தை முன்னிட்டு பிரதிபாதித்த முக்தாபலஸங்கிரகவசனத்திற்கு அர்த்தத்வைவித்யத்தினால் அபிப்பிராயங்கள் மாறுபட்டிருப்பதினால் அன்யஸ்மிருதி வசனாவலம்பனமன்றி ஆசாரத்தை அங்கீகரிப்பது அசாத்யம். ஆனதால் ஸ்ருதயொவிபின்னா: என்றவசனப்படிஸ்மிருதிகள்ஒன்றுக்கொன்றுமுரண்பட்டுக் கூறுமாகில், அங்கு சிஷ்டாசாரம் சிரேஷ்டம், அல்லதன்றி ஸ்மிருதி வசனங்கள் ஒற்றுமைப்பட்டு பிரத்யக்ஷமாகப் பிரகாசிக்க ஆசாரத்தையே அவலம்பனஞ்செய்யும்படி எங்கு விதித்திருக்கிறது.

10. பிருகிருதம் ஸ்மிருதிமுக்தாபல வசனத்தில் இரண்டுவிதமாக அர்த்தம் கிடைக்க இடமிருக்கிறது. ஆனதால் அவ்வசனத்தைக்கொண்டு இவ்விதந்தான் என்று நிர்ணயிக்க இடமில்லை. தீக்ஷிதர் இதை முன்னிட்டே அப்பாதீக்ஷிதீய வசனத்தை ஆதாரமாகக் காட்டினதற்குத் தங்கள் கொள்கைக்கு விரோதப்படுவதால் திருத்தி இருக்கிறதென்றும் அது அனுஷ்டானத்திலும் பிரசித்தியிலும் இல்லையென்றும் சொல்லிவிட்டீர்கள். அப்படிச் சொல்லுவதற்குக்காரணம் அது நிபந்தனகிரந்தமில்லையா? அவருக்கு நிருந்தஞ்செய்யகர்த்திருத்வமில்லையா இரண்டுமில்லையென்றால் காரணமன்றியாதையும் நிஷேதித்து விடலாம். தாங்களாவது பல ஸ்மிருதிகளைப் பார்த்தவர்கள். அவைகளில் நின்று ஒரு வசனமாவது சொல்லக்கூடாதா? வசனமன்றி ஆசாரத்தையே ஆதாரமாகச் சொல்லுவது சாஸ்திரம்பொருத்தமல்ல. ஆனதால்.

இச்சமயம் இதரஸ்மிருதி வசனங்களின் அவலம்பனம் பிரகிருத விஷயத்திற்குவரபடாதவரையில் அமாதியோகமுற்றமதிதினந்தான்மகோதயம் என்று தாங்கள் சித்தாந்தப்படுத்த சிரமப்படும். இனி ஆர்யதர்மபத்திரிகையின் அழகான பக்கங்களை ஆடம்பரவசனங்களை வரைந்து நிரப்பாமல் மனதுமுறண்டை விடுத்து மனுஸ்மிருதி வசனங்களைக் கொடுத்து குதூகலத்துடன் குவலயமெங்கும் உலாவிவரும்பத்திரிகையை பார்க்கப்பிரார்த்திக்கிறேன்.

11. सौम्यवारे ஸௌம்யவாரெ என்கிறபதத்திற்குத்திங்கள்கிழமை என்றுதான் பொருள் புதன்கிழமை என்று கூறுவது சரியல்ல.

आचारश्चैव साधूनाम् ஆசாரஶ்சைவ ஸாதூநாம்

என்கிற பல ஸ்மிருதி ஆசாரத்தை முக்கியப் பிரமாணமாகக் காட்டியிருப்பதால் என்றும், ஆகையால் வரும் தைமீ 20உ புதன்கிழமை மஹோதய புண்யகாலமில்லை என்றும் அ. ராமபத்திரசாஸ்திரீ நா. சிவசுப்பிரமணிய சாஸ்திரீ, ந. ச. வெங்கிட்டராமசாஸ்திரி இவர்களுடைய வியாசத்தையும் எழுதினீர்களே? இவர்கள் ஏதேனும் ஆதாரவசனத்தைக் காட்டித்தீர்மானித்தார்களா? அனுஷ்டானத்தைக் கொண்டு தீர்மானித்தார்களா? साधूनां ஸாதூநாம் என்ற षष्ठ्यन्त ஷஷ்ட்யந்த பதம் ஆசாரத்தில்

அன்வயமா? आत्मनः ஶ்ருதேந: என்பதில் அன்வயமா? அந்றேல் देहली-दीपन्यायं தேஹலீதீபந்யாயம் பற்றி இருபக்கங்களிலும் அன்வயமா? அல்லது आचारश्चैव साधूनां ஆசாரஶ்சைவ ஸாதூநாம் என்பது பல ஸ்மிருதியில் அன்வயமா? आचार ஶ்ருவாரத்தில் அன்வயமா? ஒரு வசனமும் காட்டாமலும் தீக்ஷிதர்அபிப்பிராயத்தைக்கண்டிக்காமலும்இப்படித்தான்செய்யவேண்டுமென்பதைமுன்னிட்டுஅதை ஆதாரமாகமாத்திரம் எழுதித் தீர்மானிக்க நியாயமுண்டா நாம் சொல்வதே நியாயமென்றால் ஆதாரவசனமன்றி புதன்கிழமைதான் மஹோதயம் செய்யவேண்டுமென ஆயிரம் கையெழுத்திட்ட கடிதங்களைப் பார்க்கலாம்.

ஆகையால் ஆதாரமற்று ஆதவனடுத்த தினந்தான்மகோதயம் என்றவர்களின் வசனத்தையும் ஆதாரமாக ஆர்யதர்மபத்திரிகையில வரைந்ததைப்பார்க்க ஆள்க்கூட்டம் காட்டுவதாக ஆகுமேயன்றி மகோதயத்தை மதிதினத்தில்தால் செய்யவேண்டுமென ஆகாது. சுந்தரேச சாஸ்திரி.

ஸ்ரீப்ரஹ்மவித்யாவாஸ: வைத்தியநாத கனபாடிகள்.

---

## வருகிற தைமீ 20உ மஹோதயபுண்யகாலம் சாஸ்திர ரீதியாய்க் கூறுவது தவறு.

கானப்பேட்டை சுந்தரசாஸ்திரியளால் இதுவரையில்கீழ்கூறப்பட்ட விஷயம் பூராவும் சாஸ்திரங்களுக்கும் சிஷ்டாசாரங்களுக்கும் சற்றும் பொருத்தமில்லாதது. என்று பண்டிதமணிகளுக்கு அறிவிக்கவேண்டிய அவச்யமில்லாவிடினும், ஸாமான்ய ஜனங்களுக்கும், சாஸ்திரங்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிவிக்கவேண்டி இவ்வியாஸத்தைவெளியிட முன்வருகிறோம்.

1. மற்றும் பலரும் கருதுகிறார்கள். கருதுபவர்கள் எவர்கள் அவர்களின் அபிதானங்களை அன்னியர் அறியக்கூடாதா? என்று சாஸ்திரியார் கேட்டிருக்கிறார்.

காசியில் சௌகாம்பாபிரஸ்வில் அச்சிடப்பட்ட கிாணவிந்துவென்கிற கமலாகரபட்டாசார்யரவர்களாலியற்றப்பட்ட கிரந்தத்தில் 754-வது பக்கத்தில் ஷை கிரந்த வியாக்கியான கர்த்தாவான கிருஷ்ணம் பட்டாலியற்றப்பட்ட வியாக்கியானத்தில் தர்மப்பிரவிர்த்தி என்னும் கிரந்தத்தில்,

पातस्यान्ते पूर्वभागेत्त्रमायाः श्रोणामध्ये भास्करस्योदये च ।
भानोर्वारेह्यर्धमित्याहुरार्याश्चेन्दोर्वारे तन्महत्पूर्वमाहुः ॥

பாதஸ்யாந்தே பூர்வபாகேத்ரமாயா: ஶ்ரோணாமத்யே பாஸ்கரஸ்யோதயே ச । பாநோர்வாரே ஹ்யர்த்தமித்யாஹுரார்யா: சேந்தோர்வாரே தந்மஹத்பூர்வமாஹு: ॥

இந்தவசனமிருப்பதாக வெளியிட்டிருக்கிறார். இதினால் திங்களன்று தான் மஹோதயமென்று, நிச்சயமாய்த் தெரிகின்றது.

கொஞ்சகாலைக்குமுன் வெளிவந்த சுதேசமித்திரனில் ஈரோடு செல்லப்பாசாஸ்திரியவரால் திதிதத்வம் என்னும் கிரந்தத்தில்,

अमाश्रवणपातानां योगस्सूर्योदये यदि ।
भानुवारे पुष्यमासे ह्यर्धोदय इति स्मृतः ॥
यदि स्यादिन्दुवारे तत् योगः प्रोक्तो महोदयः ।

𑌅𑌮𑌾𑌶𑍍𑌰𑌵𑌣𑌪𑌾𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌸𑍍𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌦𑌯𑍇 𑌯𑌦𑌿 ।
𑌭𑌾𑌨𑍁𑌵𑌾𑌰𑍇 𑌪𑍁𑌷𑍍𑌯𑌮𑌾𑌸𑍇 𑌹𑍍𑌯𑌰𑍍𑌧𑍋𑌦𑌯 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥
𑌯𑌦𑌿 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑍍𑌦𑍁𑌵𑌾𑌰𑍇 𑌤𑌤𑍍𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌮𑌹𑍋𑌦𑌯𑌃 ॥

என்று இருப்பதாக வெளியிடப்பட்ட வசனத்திலும் திங்கள் கிழமைதான் மஹோதய புண்யகாலமென்று ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. மேலும் அதிலேயே துலாமாஸ மஹாத்மியத்தில் 30-ஆவது அத்தியாயம் 38-ஆவது சுலோகம்.

इन्दोर्वारे तं महापूर्वमाहुः 𑌇𑌨𑍍𑌦𑍋𑌰𑍍𑌵𑌾𑌰𑍇 𑌤𑌂 𑌮𑌹𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌾𑌹𑍁𑌃

என்று ஒரு புஸ்தகத்தில் பாடமிருப்பதாகவும் கூறுகிறார். இதினாலும் திங்கள் கிழமை என்று தான் கூறப்படுகின்றது.

இவ்விதம் இன்னும் அனேகம் பிரமாணங்களிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

வேறு சில துலாபுராணங்களிலும் चान्द्रे वारे 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌵𑌾𑌰𑍇 चान्द्रवारे 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌾𑌰𑍇 என்றும் கூறியிருக்கிறார்கள் அதற்கும் சந்திர சம்பந்தமான வாரம் என்றுதான் பொருள் கூறவேண்டும். புதன் என்று கூற வியாகரண சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை இந்த அபிப்பிராயத்தையே சப்த கல்பத் ருமத்திலும் சாந்திர பதத்திற்குப்பொருள் கூறுமிடத்தில் நன்கு வெளியிட்டிருக்கிறார்.

அன்றியும் காலவிதானமென்னும் கிரந்தத்தில் 131 ஆவது பக்கத்தில்

पुष्ये माघेत्वमावास्यापातयोः श्रवणे यदि ।
सोमे वा सौम्यवारे वा महोदय इति स्मृतः ॥

𑌪𑍁𑌷𑍍𑌯𑍇 𑌮𑌾𑌘𑍇𑌤𑍍𑌵𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌪𑌾𑌤𑌯𑍋𑌃 𑌶𑍍𑌰𑌵𑌣𑍇 𑌯𑌦𑌿 ।
𑌸𑍋𑌮𑍇 𑌵𑌾 𑌸𑍌𑌮𑍍𑌯𑌵𑌾𑌰𑍇 𑌵𑌾 𑌮𑌹𑍋𑌦𑌯 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதினாலும் திங்கள் கிழமை என்று தெரிகின்றது. ஆனால் புதன்கிழமையையும் விகல்பமாக அங்கீகரித்திருக்கிறாரென்று கேட்கலாம். திங்கள் கிழமை தான்என்று ஸ்பஷ்டமாய் கூறும் கீழ்க்காட்டிய வசனங்களாலும் சிஷ்டாசாரத்தாலும் அதை அங்கீகரிக்க முடியவில்லை.

சிராத்தகாண்டத்திற்கு தமிழுரை எழுதிய அய்யாஸ்வாமி தீக்ஷிதரும் ஸௌம்ய பதத்திற்குத்திங்கள் கிழமை என்று தான் அர்த்தமென்று வரைந்துள்ளார். இவ்வளவு வசனங்களிருக்க இவைகளை ஒன்றையும் சரியானபடி கவனியாமல் அப்பாதீக்ஷிதர் எழுதிய ஒரு வசனத்தை மாத்திரம் கொண்டு வீண் அச்சலிடுகின்றார்கள் கஷ்டம்.

மேலும் இந்த சிராத்த காண்டத்தில் மூர்த்தி ஸௌம்ய வாரேண என்று காட்டப்பட்டிருக்கும் வசனத்திலிருக்கும் ஸௌம்ய பதத்திற்கு ஸோமதேவ தாகம் என்றுதான் வைத்யநாத தீக்ஷிதர் அபிப்பிராயமென்று மேற்கூறியிருக்கும் வசனங்களால் நன்கு வெளியாகின்றன. அமையுடன் கூடிய பானுவாரத்திற்கும் ஸோமவாரத்திற்கும் வ்யதீபாதம் முதலான ஸம்பந்தம் நேருங்கால் அர்த்தோதயமென்றும் மஹோதயமென்றும் கூறிப்பிறகு இதர யோகங்களின் ஸம்பந்தமில்லாமல் அமையுடனும் அல்லது வேறுதிதிகளுடனுமாவது பானுவாரம் ஸோமவாரம் சேர்ந்தாலும் அதற்கும் விசேஷமுண்டு.

अमा वै सोमवारेण रविवारेण सप्तमी ।
चतुर्थी भौमवारेण विषुवैस्सदृशं फलम् ॥ व्यासः ॥

அமாவை ஸோமவாரேண ரவிவாரேண ஸப்தமீ ।
சதுர்த்தீ பௌமவாரேண விஷுவைஸ்ஸத்ருசம் பலம் ॥

ஸோமவாரத்துடன் அமா சேர்ந்தாலும் பானுவாரத்துடன் ஸப்தமீ சேர்ந்தாலும் பௌமவாரத்துடன் சதுர்த்தசி சேர்ந்தாலும் விஷுவமென்கிற புண்யகாலத்திற்குச் சமானமான பலம் என்று காண்பிவித்திருக்கிறார். இதினால் இந்தப் பிரகரணத்தில் பானுவும் ஸோமனும் தான் விவக்ஷிதமேயல்லாமல் புதனில்லை என்று நிச்சயமாய் இருக்கிறது. மேலும் இந்த அபிப்பிராயத்தையே

अमावास्या तु सोमेन सप्तमी भानुना सह ।

அமாவாஸ்யா து ஸோமேந ஸப்தமீ பானுநா ஸஹ ।

என்கிற சங்கவசனத்தாலும் காண்பித்திருக்கிறார். ஸௌம்ய பதத்திற்குப் புதன் அர்த்தமாயிருந்தால் ரவியுடன் கூட அவனுக்கு அமையுடனும் மற்றுமுள்ள திதிகளுடனும் உள்ள விசேஷத்தைக் காண்பிக்கவேண்டிய அவச்யமான பிரகரணத்தில் ஸோமனைக்கூறப் பிரஸக்தியில்லை. ஆகையால் ஸௌம்ய பதத்திற்கு ஸோமதேவதை என்று தான் பொருள்.

பின்னும் அந்தப் பிரகரணத்திலேயேஸ்பஷ்டமாகவும் கூறியிருக்கிறார்.

अर्कश्रुतिव्यतीपातयुक्तामा पुष्यमाघयोः ।
असावर्धोदयो योगः कोट्यर्कग्रहसन्निभः ॥

सोमवारयुतो दर्शस्सूर्यग्रहणसन्निभः ॥

[illegible]

[illegible]

[illegible]

இங்கு முதல்சுலோகத்தினுல் அர்த்தோதயத்தை நிரூபித்து இரண்டாவது பாதி சுலோகத்தால்மகோதயத்தைத்தெரிவிக்கிருர். முன் அர்த்தோயத்துக்குக் கூறப்பட்ட வாரத்தைத் தவிர பாக்கி யோகங்களுடன் அமையானது. **सोमवारयुत:** [illegible] திங்கள் கிழமையுடன் கூடியிருந்தால் அதற்கும் மஹோதயம் என்று பெயர். அது சூர்யக்கிரணமென்கிற புண்யகாலத்திற்குச் சமானமாகும் என்று நன்கு நிரூபித்திருக்கிருர் ஆகையால் வைத்திஞத தீக்ஷிதர் அபிப்பிராயப்படி திங்கள்கிழமை தான் மகோதயத்திற்கு நிமித்தமென்று நன்ருய் தெரிகின்றது.

2. அவ்வசனங்கள் இவர்களின் அபிப்பிராயத்தைப் பின்பற்றுமென்று தோன்றவில்லை என்பது தங்கள் இஷ்டத்திற்கு இடையூரா இருப்பதால் 'தோன்றவில்லையா? அல்லது அவர்வசனங்களுக்கு அர்க்களங்களான அன்னியஸ்மிருதி வசனங்களைக் கொண்டா? என்று கேட்டிருக்கிறது.

இதுவும் தீவரே சாஸ்திரார்த்தங்களின் உண்மையைப் பொதுவாய் விசாரிக்குங்கால் தங்களிஷ்டமென்று சொல்ல அறிஞர்கள் முன்வர மாட்டார்கள். மற்றுமுள்ள சாஸ்திரார்த்தங்களும் அவர் காட்டியுள்ள வசனங்களும் தீக்ஷிதர் கூறியுள்ள அபிப்பிராயத்தை அனுஸரிக்காதென்று வசனுர்த்தங்களையும் விசாரித்து நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. தீக்ஷிதர் எந்த ஸ்மிருதி வசனங்களை ஆதாரமென்று காண்பித்திருக்கின்ருரோ? அவைகளே இவருக்கு ஆதாரமாகாதென்று நிரூபித்திருப்பதை சற்றும் கவனியாமல் துரபிமானமும் பிடிவாதமுமில்லாத நம் சாஸ்திரிகள் தீக்ஷிதர் வசனங்களுக்கு அவர் கூறுவதே ஸரியான அர்த்தமென்று எப்படிக் கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. ஸௌம்யவார என்கிற இந்த இடத்திய் எம்மால் 1வது பாராவில் காட்டப்பட்ட வசனங்களையும் கொண்டு திங்கள்கிழமை என்று தான் பொருள் கொள்ளல் வெண்டும் இதற்குப்பிறகு அப்பாதீக்ஷிதர் வசனம் ஒன்றை விட்டு வேறு எந்த ஸ்மிருதி வசனங்கள் தீக்ஷிதருக்கு ஆதாரமாக இருக்கென்று சாஸ்திரிகள் கூச்சலிடுகிருரோ தெரியவில்லை.

3. ரூடியால் ஏற்பட்டதா யௌகிகமாகக்கூறப்பட்டிருக்கின்றதா அமரகோசத்தில் இருக்கும்தங்கள் கக்ஷிக்கு அனுகுணமாகச் சக்யார்த்தத்தைச் சம்மதித்தீர்கள் பங்கேருஹம்போல் யோகரூடி என்று என் ஒப்புக்கொள்ளக்கூடாது என்று கேட்டிருக்கிருர்.

சாஸ்திரார்த்தங்களை அற்பமாகவாவது குருமுகமாகக் கிருஹித்திருந்தால் இந்தக் கேள்வி கேழ்க்க நியாயமில்லை. பங்கேருஹ பதமானது

யோகரூடியாக பத்மத்தைச் சொல்லுகிறதென்பதுண்மை அந்தப்பதமானது. எந்த ஸமயத்திலும், பத்மம் என்கிற பொருளையே கூறுமேயன்றி அதைவிட்டுப் பாசியையோ அல்லிப்பூவையோ ஒரு ஸமயத்திலும் கூருதென்றும் இதர அர்த்தத்தில் யாராவது பிரயோகம் பண்ணினாலும் அது தப்பென்று யாரும் அங்கீகரிக்கக்கூடியதே சம்புவரையில் படித்த பிள்ளைகளுக்குக்கூட இது நன்ராய் தெரிந்தவிஷயம் ஸௌம்யபதத்தையும் யோகரூடியாக என் அங்கீகரிக்கக்கூடாதென்று சாஸ்திரிகள் தைர்யமாய் வினவுகிறார். அவ்விதம் அங்கீகரித்தால் பங்கேருஹபதம்போல் ஸௌம்யபதமும் புதனைத்தவிர வேறு பொருளைக்கூறாதிருக்க வேண்டுமே அவ்விதமிருக்கா என்று கவனித்தால் பாணினிமஹரிஷி ஸௌம்ய என்கிற பதத்திற்குத்திங்களை தேவதையாக உடையது. என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறார் பின்னும் அழகான மேனியையுடையது என்றும் விருதம் முதலான பல அர்த்தங்களிலும் பிரசித்தமாகப் பிரயோகமிருக்கின்றது இவ்விதம்பல அர்த்தங்களில் பிரயோகிக்கப்படும் ஒரு பதத்தை யோகரூடியாகக்கூறுவது கூடாது என்று தான் அமரகோசத்திலும் சப்தகல்பத்ரு மத்திலும் யௌகிகமாகஸௌம்யபதத்திற்குப் பொருள் கூறியிருக்கிறார்கள் பதங்களுக்கிருக்கும் சக்தியையும், யோகரூடி என்பதின் உண்மையான அர்த்தத்தையும், சற்றும் கவனியாமல் இந்த அபூர்வார்த்தத்தைப் பேபரிலும், எழுதிக்கேட்க ஆரம்பித்துவிட்டார்கள் அந்தோ கலியின்விந்தை.

4. சோமஸப்தாது அபத்யார்த்தே ட்யண் வந்து புதன் என்று சப்தகல்மத்ருபத்திலும் எழுதியிருப்பதையும் சற்றுஸமாதானமனத்துடன் எறிட்டுப்பார்க்க என்றும், காட்டியிருக்கிறார்.

ஸோமசப்தத்திற்கு அப்த்யார்த்தத்தில் ட்யண் பிரத்தியம் வந்து ஸௌம்ய என்று ஆகிறது. என்று அமரக்காரர் சொல்லியிருக்கிறாரென்று எம்மால் ஒப்புக்கொண்டு முந்தியே எழுதப்பட்ட விஷயத்தை சப்தக்ல்பத்ருமத்திலுமிருப்பதாகக்காட்டுகிறார். இதினால் இவர்களுக்கு எற்பட்டஸாதகமின்னதென்றுதெரியவில்லை-ஸௌம்யபதத்திற்குப் புதன் என்கிற பொருள் ஒரு ஸமயமும் கிடையாதென்று நாங்கள் கூறுவதாயிருந்தால், அப்பொருளுண்டென்று இந்த ஆகாரத்தை வெளியிடுவது உசிதமாகும். ஸௌம்யவாரேஎன்கிறஇடத்திலுள்ளஸௌம்யபதத்திற்குதிங்கள் என்றுதான் பொருள் கூறவேண்டுமென்று இதரப் பிரமாணங்களையும் கொண்டு காட்டியதற்கு கல்பத்ருமம்,எப்படி பாதகமாகும் அதேகல்பத்ருமத்திலோ அல்லது அமரகோசத்திலோ ஸௌம்யபதத்திற்கு ஸோமனை தேவதையாக உடைய என்கிற அர்த்தம் எழுதப்படவில்லையா? அந்த இடத்தை சாஸ்திரிகள் பார்க்காமலிருக்கலாம். அறிஞர்கள் அவ்விதமிருப்பது அழகல்ல.

5. இதுதான் இந்த இடத்திற்குப் பொருத்தமான பொருள் என்கிறீர்கள். தங்களிஷ்டப்படி திங்கள் கிழமை என்று அர்த்தம்செய்யவேண்டி

இந்த இடத்தில்இஷ்டத்திற்குஇதுதான்பொருத்தமானபொருள் என்றால் தீக்ஷிதர்அவர்கள்இஷ்டப்படி புதன்கிழமை என்று அர்த்தம்செய்யவேண்டி சம்பந்தார்த்தத்தில் அண் !பிரத்தியயத்தினால் இந்த இடத்திற்கு இது தான் பொருந்துமென்று என் சொல்லமாட்டார்கள், என்றும் எழுதியிருப்பதும் சரியல்ல.

நம் சாஸ்திரிகளுக்கு சாஸ்திரார்த்தத்தை மாற்றினாலும், தீக்ஷதர் அபிப்பிராயத்தை கௌரவிக்க வேண்டுமென்கிற அபிமானம் பூராவாக இருக்கிறது. எனக்கும் தீக்ஷதரிடம் அதிக அபிமானம் உண்டு. ஆனால், சாஸ்திரார்த்தங்களுக்கு விரோதமாக அந்த அபிமானத்தைக்காட்டமுடியவில்லையே என்று வருத்தப்படுகிறேன். இங்கு புதன் கிழமையென்று அர்த்தம் செய்யவேண்டி ஸம்பந்தார்த்தத்தில் அண்பிரத்தியயத்தினால் என் தீக்ஷிதர்கள் ஸாதிக்கமாட்டார்கள் என்கிறார், இதையும் கொஞ்சம் விசாரிக்கிறோம். ஸோமசப்தத்தைக் காட்டிலும் அண் வருகிறதா? ஸௌம்ய சப்தத்தைக் காட்டிலும் ஸம்பந்தார்தத்தில் அண் வருகிறதா. ஸோம சப்தத்தைக்காட்டிலும் வருகிறதென்றால் எங்களுக்கு ஸாதகம் ஸௌம்ய சப்தத்தைககாட்டிலும் வருகிறதென்றால் ஸௌம்ய என்று எப்படி வித்திக்கிறது.அபதயார்ததத்தில் त्यत्र ष्यञ् என்று கல்பத்ருமத்தில் இருக்கிறதாகக் காட்டப்பட்டிருக்கிறது. கல்பத்ருமமென்பது பதங்களுக்கிருக்கும் அர்த்தங்களை வெளியிடவந்ததே ஒழிய பதங்களின் ஸ்வரூபஸித்திற்காக வந்ததல்ல. ஸௌம்ய என்ற பதத்திற்கு புதன் என்று பொருள். அதற்குஅபத்யார்த்தத்தில் त्यत्र ष्यञ् வந்திருக்கும் என்று மாத்திரம் தான் அதில் கூறும். அபத்யார்த்தத்தில் இந்தப் பிரத்தியம் உண்டா? அது எந்த சூத்திரத்தால் என்கிற விசாரம் பூராவும் வியாகரண சாஸ்திரத்தால் செய்யவேண்டும். தேவதார்த்தத்தில் ஸ்பஷ்டமாய் सैामास्यण् ஸொமோட்யண் என்று விதியிருப்பது போல்அபதயார்த்தத்தில்கிடையாது. எங்காகிலும் ஆகிருதிகணத்தில் தள்ளிஇருப்பதற்குஎப்படியாவது கதிகற்பிக்கவேண்டுமேயன்றி இன்ன சூத்திரத்தாலென்று குறிப்பிட முடியாது. ஸௌம்ய சப்தத்திற்கு புதனைத் தவிர்த்து வேறு பொருள் கூறமுடியாத அவசியமான இடங்களுக்கு எப்படியாவது ஒரு கதிகற்பிக்கவேண்டி, रौहिणेयो बुधस्सौम्य: ரௌஹிணெயொ வுயஸ்ஸௌம்ய: என்கிற விடங்களில் அபத்யார்த்தேப் பிரத்தியபத்தை அங்கீகரிக்கிறோம். இந்த அர்த்தத்தை ஸௌம்யவாரே என்கிற இடத்திலும் இதரப் பிரமாணங்களின் கருத்திற்கிணங்க ஸ்பஷ்டமாய சூத்திரத்தால் போதிக்கப்படுப்படும், சந்திரனை தேவதையாக உடைய என்கிற அர்த்தத்தை விட்டு அபத்யார்த்தத்தை எப்படிக் கூற முடியும்? தேவதார்த்தத்தில் இந்த சூத்திரத்தால் அண் வருகிறதென்று எடுத்துக் காட்டியது போல் அப்தயார்த்தத்திலும் இந்த சூத்திரத்தினால் त्यत्र ष्यञ् என்று நம் சாஸ்திரிகள் ஏன் எடுத்துக் காண்பிக்கக்கூடாது.

மேலும் ஸௌம்ய சப்தத்தைக்காட்டிலும் ஸம்பந்தார்த்தத்தில் அண் பிரத்தியயத்தினால் என் ஸாதிக்கமாட்டார்கள் என்று தீக்ஷதரிடம் வகாலத்து வாங்கிக்கொண்டு வெகு ஆக்ரகத்துடன் சாஸ்திரிகள் அதட்டுகிறார்கள். இவ்வளமட்டில் பேசத்தெரிந்ததேயன்றி சம்பந்தார்த்தத்தில், அண் பிரத்தியயம் எந்த சூத்திரத்தினால், என்று என் நிரூபிக்கமுடியவில்லையோ தெரியவில்லை. ஸௌம்ய சப்தத்தைக்காட்டிலும் சம்பந்தார்த்தத்தில், வ்ருத்தாச்ச: வ்ருஜோஞ்ஞ: என்கிற சூத்திரத்தால் மாலீய: சாலீய: என்கிற இடங்களில் போல் ச்சப்ரத்யயம்தான் வரவேண்டும்.

அவ்விதமில்லாமல் அண் எப்படி வருகிறதோதெரியவில்லை. தம்மனதில் ஒன்றைப் பிடிவாதமாக நினைத்துக்கொண்டு, சாஸ்திரார்த்தங்களைச் சரியானபடி கவனியாமல் பொதுவாய் ஸாமான்ய ஜனங்களை வஞ்சிக்க வேண்டி தோன்றியபடி பிரத்தியத்தையும், அர்த்தத்தையும் சொல்லுகிறவர்களுக்கு எங்குதான் எந்தமாதிரிதான் சொல்லக்கூடாது. சாஸதிரார்த்தங்களில் கட்டுப்பட்டவர்களுக்கன்றோ சிரமம். நம் சாஸ்திரிகள் தம்மையே பாணினியாகக் கருதிப்பேசுகிறார்போல் தோன்றுகிறது. அதை எப்படி அங்கீகரிக்கமுடியும் இதினால் ஸம்பந்தார்த்தத்தில் ஸௌம்ய சப்தத்தைக்காட்டிலும் அண் வருகிறதென்று கூறியிருப்பது தவறென்றும் ஸ்பஷ்டமாய் விளங்கும். ஸ்மிருதி முகதாபலத்தில் புதஸோமள என்கிற சிலவசன விஷயங்களைக்காட்டி அங்கு ஸோமவாரம் புதவாரம், என்று பொருள் கொள்ளவில்லையா என்கிறார். வசனப்பிராமாண்யத்தால், லக்ஷணையாகவோ தாத்பர்யார்த்தமாகவோ சில விடங்களில் வேறு அர்த்தம் கூறமுடியாமல் சொல்லும்படி நேரும். லக்ஷணையில்லாமல் சக்யார்த்தமாக சாஸ்திரீயமாய் அர்த்தம் செய்யக்கூடிய இடங்களிலும் இந்த மாதிரி இடங்களைக்காட்டி இதுபோல் ஸௌம்ய பதத்திற்கும் லக்ஷணையாக அர்த்தம் செய்கிறேமென்று பண்டிதராயிருப்பவர் கூறமுனவருவாரா.

6. ஆக்னேயபுராணம் ஒன்றா பலவா என்றுகேட்டு அப்புராணத்தில் இவ்வசனத்தை ஓரிடத்திலும் காணகிலேன் எனகிறார். கும்பகோணம் ஸாதுசேஷய்யா அவர்கள்லைபரியில் இருக்கும் ஸபாபதிபிள்ளையால் 1890 ஹு ஸுகந்தகுந்தளாம்பாபிரஸ்ஸில் அச்சிடப்பட்ட ஆக்னேயபுராணாந்தர்கத காவேரிமஹாத்மியத்திலிருக்கிறது. சங்கையிருந்தால் நேரிலோ லடர் மூலமாகவோ தெரிந்துகொள்ளலாம் சாந்திரவாரே என்று இருப்பதாக இவரே எழுதியிருக்கிறார். அந்தப்பதம் சந்திரனுடை ஸம்பந்தமானவாரம். என்று சொல்லுமேயல்லாமல் புத்திரன் என்று ஒருநாளும் கூறாது. சாஸ்திரஞானமில்லாமல் ஸ்மிருதி வசனங்களுக்கு தோன்றியபடி பொருள்கூற எப்படி முன்வந்தாரோ தெரியவில்லை.

7. ரௌத்ரிஹு தைமீ என்று உபக்கிரமித்து, பஞ்சாங்கங்களில் போடப்பட்ட எல்லா விஷயங்களும் நமக்குப்பிரமாணமாகுமா என்று கேட்டிருக்கிறார், சாஸ்திரவிரோதமில்லாத விஷயங்கள ாயிருப்பின் அவை

யாவும் பிரமாணமே. பிருகிருத விஷயம் சாஸ்திரானுஸாரியாயிருப்பதால் அது நமக்குப் பிரமாணமே. ஸித்தாந்த பஞ்சாங்கத்தில் இவர் இஷ்டம் போல் போட்டிருப்பதால் சாஸ்திரவிரோதமாயிருந்தாலும் அது இவருக்கு உபநிஷத்தாகத்தோன்றுகிறது. இவர்தான்பக்ஷபாதமும்அபிமானமும் இல்லாமல் பேசுகிறார்.

8. ஸித்தாந்தப்பஞ்சாங்கத்தில் தீக்ஷதர் அபிப்பிராயப்படி நாளது தைமீ 20உ புதன்கிழமை போட்டிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா. என்கிறார். பஞ்சாங்கங்களையே, ஒன்றையும் நம்பாமல் பஞ்சாங்கங்கணிப்போர்கள் ஞானமில்லாதவர்கள் என்று கருதும் இம்மஹானுக்குஸித்தாந்த பஞ்சாங்கம் மாத்திரம் சுருதியாகஎப்படித்தோன்றிற்றோ தம்மிஷ்டத்தை எப்படியாவது ஸாதிக்கவேண்டுமென்கிறஆக்கிரகம்மேலிட்டால் முன்னுக்குப்பின் விரோதமாகக் கூறுகிறோம், என்கிறஞாபகமில்லாமல் வியவகாரம் செய்வதால் அவர்களின் ஞானம் நன்கு வெளியாகிறது. மேலும், புண்ய காலத்தைப்போடாத பஞ்சாங்கங்கள் பலவிருக்க அவைகளைவிட்டு ஒரு பஞ்சாங்கத்தில், போடப்பட்டிருப்பதை மாத்திரம் இவருக்குக் காண்பிக்கும்படி எப்படி தோன்றிற்று. பஞ்சாங்கங்களை நாம் பிரமாணமாக அங்கீகரித்தாலும் சாஸ்திரார்த்தங்களுக்கும்பலபஞ்சாங்கங்களுக்கும்விரோதமாய் ஒன்றிருந்தால் எதைப்பிரமாணக்கொள்கிறதென்பதை என் கவனிக்கவில்லையோ தெரியவில்லை.

சாஸ்திர விரோதமான ஆசாரத்தை நாங்கள் பிரமாணமாகக்காட்டவில்லை.சாஸ்திரார்த்தங்களைமுந்திநிரூபித்து அதற்குஅனுகுணமாகஆசாரமும்இருக்கிறதென்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதையறியாமல்அவிவேகத்தால் சோன்றியபடி வியவகரிப்பவர்களுக்கு யாரால்தான் பதில் கூற முடியும் தாம் எவ்வளவு ஸ்மிருதி வசனங்களை ஆதாரமாகக் காட்டியிருக்கிறோம் என்பதை சற்றும் கவனியாமல், வீணில் பிறரை தூஷிப்பதுபண்டிதர்களின் செய்கையல்ல—அடிக்கடி அப்பாதீக்ஷதர் அப்பாதீக்ஷதர் என்று கூச்சலிடுகிறார். இந்தப் பிரமாஸ்திரத்தைக்கொண்டு மற்றொன்றையும் கவனிக்கக்கூடாதென்றால் அதெவ்வனம் ஸாத்தியமாகும். அப்பாதீக்ஷதர் வசனம் தவிர வேறு இவருக்கு ஆதாரமான வசனம்வதுஸௌம்ய சாந்திரஎன்கிற பதங்களுக்குச் சாஸ்திரவிரோதமான பொருளை இவராகச்செய்துகொண்டு தமக்குப்பலமான ஆதாரமிருப்பதாகக்கருதுகிறார். அதுமுற்றிலும் தவறேயாகும்.

9. புதன்கிழமை மஹோதயபுண்யகாலமென்றுகூறும் இவர்களால் எவ்வளவு ஸ்மிருதிவசனங்கள் காண்பிக்கப்பட்டிருக்கின்றனவோ, அதற்கு குறைவில்லாத பிரமாணவசனங்களை நாமும் வெளியிட்டிருக்கிறோம்.

10. ஸ்மிருதி முக்தாபலத்திலிருக்கும் வசனங்களுக்கு இதரப்பிரமாணவசனங்களையும் அனுஸரித்து அர்த்தம் செய்தால் திங்கள் கிழமை என்றுதான் பொருள், என்று கீழ்காட்டிய அர்த்தத்தைமறக்கக் கூடாது.

இதுவரையில் நிரூபிக்கப்பட்ட விஷயங்களால் இந்த வருஷம் தைமீ 20உ மஹோதய புண்ணியகாலத்திற்குறிய லக்ஷணமில்லாதபடியால் கிழமை மாறியிருப்பதால் அந்த தினத்தை மஹோதய புண்ணியகாலமாகக் கொள்ளக் கூடாது.

11. ஸௌம்யவார என்கிற பதத்திற்கு சாஸ்திரீயமான சரியான அர்த்தத்தைத் தாம் கூறிவிட்டதாகவும் பிறர் இந்த ஸூக்ஷ்மார்த்ததைக்கண்டு பிடிக்கவில்லை என்றும் நம் சாஸ்திரிகள் தாமாகவே நினைத்துக்கொண்டு பிறரை தூஷிக்க முன் வந்துவிட்டார் அ. ராமபத்திர சாஸ்திரி முதலானவர்கள் கூறியவரையில் சாஸ்திரவிரோதமில்லை. யோகரூடி என்றும் அண் பிரத்தியமென்றும் தாறுமாருய் எழுதியிருக்கும் இவர்களுக்கு அவர்கள் சொல்லியிருப்பது எப்படி சரியாகத்தோன்றும் தம்மைச்சிறந்த பண்டிதரென்றும் தம்மால் எழுதப்பட்ட விஷயம் மிகவும் சாரமாசனதென்றும் அதுபேபரில் பிரசுரிக்கயோக்கியமானதென்றும் தாமாகக்கருதிக்கொண்டு தம் தோஷத்தையறியாமல் பிறரை தூஷிப்பவர்களின் புத்தி சக்தியை யாரால் கூறமுடியும் இவ்விதம் அதர்ம்மத்தைத் தர்ம்மமாக வெளியிட்டு பிறரையும் தூஷிக்கும் மஹான்களுக்கு நல்லபுத்தியைக் கொடுத்து அனுக்கிரகிக்குமாறு ஸர்வலோகேசுவரனை பகவானைபிரார்த்தித்து இவ்விஷயத்தையும்முடித்துக் கொவுகிறேன்.

शास्त्रार्थानभिवीक्ष्य साधुकृपया श्रीमद्गुरूणां मया
निर्णीतोऽद्य महोदयो हिमरुचेर्वारे वरे स्यादिति ।
विद्वांसः प्रथिता विलोक्य दयया यद्यन्यथा स्यादयं
तत्वार्थं मम बोधयन्तु शिरसा गृह्णाम्यहं सा नतिः ॥

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌭𑌿𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑌾𑌧𑍁𑌕𑍃𑌪𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍂
𑌣𑌾𑌂 𑌮𑌯𑌾 𑌨𑌿𑌰𑍍𑌣𑍀𑌤𑍋𑌽𑌦𑍍𑌯 𑌮𑌹𑍋𑌦𑌯𑍋 𑌹𑌿𑌮𑌰𑍁𑌚𑍇𑌰𑍍𑌵𑌾𑌰𑍇
𑌵𑌰𑍇 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 । 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌃 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌾 𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯 𑌦𑌯𑌯𑌾 𑌯𑌦𑍍𑌯
𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌯𑌂 𑌤𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑌮 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑍁 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌗𑍃
𑌹𑍍𑌣𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌸𑌾 𑌨𑌤𑌿𑌃 ॥

பரமாசார்யாளுடைய மஹிமை பொருந்திய கிருபாபலத்தால் சாஸ்திரங்களை நன்கு பார்த்து மஹோதய புண்ணியகாலமானது திங்கட்கிழமையுடன் கூடிய அமையன்றுதான் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. சிறந்த பண்டிதராயிருப்பவர்கள் இவ்விஷயத்தைப் பார்த்து ஒரு ஸமயம் எம்மால் செய்யப்பட்ட நிர்ணயம் மாறுதலாயிருப்பின் தயவு செய்து சாஸ்திரங்களின் தத்வார்த்தத்தை அறிவித்தார்களேயானல் அதை நான் வந்தனத்துடன் சிரஸால் கிரகித்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

வைதிகதர்மாபிமானி.

# விஷயங்கள்.


| | பக்கம். |
|---|---|
| பதினோராவது ஆண்டு. | 2 |
| அவர்ண ஹிந்துக்களை இந்துமதம் புகாதவாறு செய்ய | 5 |
| கோனுப்பட்டு வேதபாராயண காலக்ஷேபம் | 9 |
| திருஞானசம்பந்தர் | 11 |
| காலத்தின் கொடுமை | 18,34,82,50,66 |
| மஹாசிவராத்திரி நிர்ணயம். | 52 |
| லிங்கஸ்வரூப விசாரணை | 53,69 |
| வரருசி | 20,36,85,58,75 |
| மதிப்புரை | 63 |
| கடன் செலுத்த கவலை வேண்டாமா | 26 |
| சிதம்பரத்தில் அத்வைத சபா | 28, 603 |
| திருநாவுக்கரசர் | 31,43, 74 |
| மதிப்புரை | 47 |
| சமஸ்கிருத வித்யாப்பியாஸம் | 89 |
| பகவத்கீதையும் வர்ணாச்ரமமும் | 93 |
| ஆந்ஹிக க்ரமஸங்க்ரஹம் | 95 |
| ஸ்ரீதப்ரபக்தசரிதம் | 98,114,130,146,162,178 |
| ரஸமஞ்சரி | 101 |
| நமது நிலைமையும் கடமையும் | 104 |
| குருபக்தியின் அவசியம் | 107,117,133 |
| பிராமணர்களே இன்னும் தூக்கமோ | 125 |
| சுந்தரர் | 134 |
| ஸ்ரீ ஹரிஹரவேதவித்யாபீடம் | 139,260 |
| முற்காலத்தில் நடந்த ஓர் தர்மஸ்தாபனம் | 140 |
| ஸ்வதர்மத்தைவிட வேண்டாம் | 143 |
| தருமம் | 149 |
| ஆஸ்திகர்களின் கடமை | 152 |
| வரதக்ஷிணை ஒழியாதா | 153 |
| ஸ்ரீகிருஷ்ணனின் ஆயுஷ்காலம் | 155,165 |
| மதிப்புரை | 160 |
| ஓர் சந்தேகம். | 172 |

| | பக்கம் |
|---|---|
| வித்யா | 182,199 |
| க்ஷயரோகமும் விவாஹாதி சுபகர்மாக்களும் | 190 |
| சங்கைக்கு மறுமொழி | 198 |
| பண்டிதர்களுக்கோர் விக்ஞாபனம் | 202 |
| தர்மமும் நகரமும் | 205 |
| இக்காலத்திற்கு அவசியம் வேண்டியது யாது | 214,238,282,294 |
| மனத்தை ஜயித்தல் | 216,236 |
| ஸ்ரீ ஹாலாஸ்ய மகாத்மியம் | 224 |
| அத்வைத சபா | 226 |
| சென்னை சமாஜத்தாரின் நோக்கங்கள் | 229 |
| கயாக்ஷேத்திரத்தில் புத்தாவதார பகவானுடைய ஆலயம் | 240,253 |
| கௌரவப்பட்டம் | 247 |
| மதிப்புரை | 248 |
| சிரத்தானந்தர் கூறியது சரியல்ல | 250,262 |
| ஸ்ரீசங்கரஜயந்தி மகோத்ஸவம் | 254 |
| சிரஞ்சீவித்வம் | 264 |
| ஹிந்தி பாஷையும் ஸநாதன தர்மமும் | 269 |
| மாந்தரின் கடமை | 271 |
| ஆ. கா. மா. வை புண்ணியகாலம் | 272 |
| கும்பகோணம் அத்வைத சபா | 274 |
| சிரௌதகர்ம்மா | 278 |
| ஹிந்துமத அனுஷ்டானம் | 280,291,297 |
| ஸத்யகாமஜாபாலன் பிராமணனு | 284 |
| ஸத்யகாம ஜாபாலன் பிராமணன் தான் | 286 |
| அத்வைத மதஸ்தர் நிலை | 296 |
| கடவுள் ஒருவர் உண்டு | 306,316 |
| தீக்ஷிதர் ஆதித் திராவிடருக்கு | 308,318 |
| உண்மை | 320 |
| வேதாந்த சித்தாந்தம் | 330,342,382,394,406 |
| ஓர் விக்ஞாபனம் | 332 |
| குடும்பதர்மம் | 335 |
| பக்தியோகம் | 338,344 |
| மதிப்புரை | 352 |

| | பக்கம் |
|---|---|
| ஸ்ரீவியாஸபூஜாமஹோத்ஸவம் | 354 |
| காட்டுமன்னார் கோவில் ஸ்ரீவியாசபூஜா | 356 |
| ஷெடியூர் நல்வரவு பத்திரிகை | 363 |
| பகவத்கீதை | 365,372 |
| கும்பகோண அத்வைத சபா | 370 |
| பண்டிதசமாஜம் | 375 |
| மாவலி | 376,384 |
| கோமாத்ருபுர வேதபாராயண விமர்சை | 386 |
| ஆர்யம் அழிவது ஏன் | 388 |
| பண்ருட்டியில் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவனம் ஆராதனமகோத்ஸவம் | 392 |
| தீண்டாமைக்கு வகாலத்து | 396,408 |
| பிருதுரார்ஜசரிதம் | 409,499,584,609 |
| ஓர் சமாதானம் | 415 |
| விதவாவிவாகமும் காந்தியும் | 418,434,446,458,470 |
| சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷிகல்விசாலையில் நடைபெற்ற உபந்யாஸத்தின் சுருக்கம் | 421 |
| ஓர் சங்கை | 432 |
| பாரிசரிதம் | 438 |
| திருச்சி ஆத்ரேய ஆயுர்வேத வைத்யசாலை | 441 |
| மதிப்புரை | 444 |
| சொல்வன்மை | 448 |
| ஸ்ரீஜகத்குருஸேவை | 451 |
| நசிகேதசயநபசுபந்தம் | 452 |
| ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின் தத்வம் | 453,461 |
| மதத்திலும் சீர்திருத்தமாம் | 463,473 |
| வித்வத்சிரோமணி மண்டலம் | 468 |
| மாணிக்கவாசகர் | 474,484 |
| சிரத்தானந்தர்கூறிய விதவா விவாகத்திற்குக் கண்டனம் | 482, 494,506,518,530,542,554,562 |
| மகாரத நிர்மாணமும் ஸ்ரீமுகானுக்கிரகமும் | 489 |
| சம்பங்குடி லக்ஷார்ச்சனை | 492 |
| ஸதாபீதசம் | 497 |
| இந்தியாவின் சிறப்பு | 501,513,521 |

| | பக்கம் |
|---|---|
| ஆராய்ந்து செயல் | 509 |
| சிவபூஜையின் மகிமை | 527,545 |
| ஆரியதர்மாபிவர்த்தினி சபையின் 15ம் ஆண்டுவிழா | 533,590,603 |
| ப்ரஹ்லாத சரித சாரம் | 547 |
| பஞ்சாயதன விவரணம் | 558 |
| மகோதயபுண்யகாலம் | 566,578,594 |
| ஸ்ரீபரமேசுவரஸேவை முக்கியம் | 570,576,588 |
| வேதகாவ்யவகுப்புகள் வேண்டும் | 572 |
| அமரகலாவாஸினி சபையின் தீர்மானங்கள் | 575 |
| அவசரவிண்ணப்பம் | 578 |
| நங்கவரம் ஸம்ப்ரோக்ஷணை | 583 |
| சிதம்பரம் ரா. ம. சு. வித்தியாசாலையின் பரிசளிப்பு | 598 |
| 11ஆண்டு பூர்த்தி | 601 |
| மனிதர்களுக்குவேண்டிய மூன்றுவித விருப்பங்கள் | 601 |
| ஸ்ரீராதாகல்யாணமகோத்ஸவ பத்திரிகை | 608 |
| காஞ்சி மஹிமை | |